Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.9 (LW.11)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஞானபாலமுருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | கண்ணையன் | தொழில் | : | உதவி வன பாதுகாவலர், திருநெல்வேலி மாவட்டம். |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | 49/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2026.

(7, 9, 10 எதிரிகள் ஆஜர். 1, 2, 3, 4, 5, 7, 11, 14 எதிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்படுகிறது. 6, 8, 12, 13 வது எதிரிகள் இறந்துவிட்டனர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் உதவி வன பாதுகாவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2004 அன்று செம்பட்டி பிரிவு, செங்கட்டாம்பட்டி வனக்காப்பாளராக பணிபுரிந்து வந்தேன். அன்றையதினம் திரு. மகேந்திரன், வனவர் அவர்களின் உத்தரவின் படி கன்னிவாடி வனச்சரகத்தில் இருந்து வனச்சரக அலுவலர் அவர்கள் அனைவரையும் அலுவலகத்திற்கு வரச்சொல்லியுள்ளார். அச்சமயம் வனச்சரகத்தில் விசாரித்தபோது, திரு. ராஜாராம் பட்டாதாரர் அவருடைய நிலத்தில் தோதகத்தி மரங்களை அடையாளம் தெரியாத நபர்கள் வெட்டிக்கொண்டிருப்பதாக தோட்ட காவலர் அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் கன்னிவாடி வனச்சரக அலுவலரிடம் புகார் மனு கொடுக்க வந்துள்ளார். அதன் அடிப்படையில் கன்னிவாடி வனச்சரக அலுவலர் உத்தரவின் படி திரு. பிச்சை, கன்னிவாடி பரிவு அவர்களின்

தலைமையில் தனிக்குழு அமைத்து சம்மந்தப்பட்ட இடத்தை தணிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டார். தனிக்குழுவினருடன் திரு. பிச்சை, வனவர் மற்றும் திரு. மகேந்திரன், வனவர் ஆகியோர் தலைமையில் அனைத்து பிரிவு பணியாளர்களுடன் திரு. ராஜாராம் அவருடைய தோட்டத்தை தணிக்கை மேற்கொண்டபோது, 7 தோதகத்தி மரங்களை அடையாளம் தெரியாத நபர்கள் வெட்டி மற்றும் செதுக்கி கொண்டிருந்தார்கள். அச்சமயம் அவர்களை சுற்றி வளைத்து பிடித்தும், அவர்கள் வெட்ட பயன்படுத்தி 2 கோடாரி, ஒரு ரம்பம், 28 செதுக்கிய கட்டைகள் மற்றும் 2 உருட்டுகட்டைகள் ஆகியவற்றை கைப்பற்றினோம்.

மேலும், திரு. பிச்சை, வனவர் ஸ்தலத்திலேயே பார்வைமகசர் தயார் செய்தார். அந்த ஸ்தல மகசரில் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஸ்தல மகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்களில் என்னுடைய கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.27/PW.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட பிடிபொருட்களான ரம்பம், கோடாரி மற்றும் கட்டைகளை கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்தோம். சம்பவ இடத்தில் வெட்டிக்கொண்டிருந்த நபர்களை கன்னிவாடி வனச்சரக அலுவலகம் கொண்டு வந்து கன்னிவாடி வனச்சரக அலுவலர் அவர்களை விசாரித்தார். அதன்பின்பு நான் என்னுடைய எல்லைக்குட்பட்ட வனச்சரக பீட்டிற்கு சென்றுவிட்டேன்.

இவ்வழக்கில் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் வனக்காப்பளராக வேலை பார்த்தபோது, எங்களது வனச்சரக அலுவலத்தில் வனச்சரக அலுவலராக வேலை பார்த்த திரு. வடிவேல் என்பவர் இறந்துவிட்டார். அவரது கையொப்பம் நன்கு தெரியும். இவ்வழக்கில் நான் புலன் விசாரணையின் போது வனச்சரக அலுவலர் திரு. வடிவேல் என்பவருடன் பணிபுரிந்ததால் இவ்வழக்கு சம்பவங்கள் நன்கு தெரியும் என்பதாலும், இவ்வழக்கில் வனச்சரக அலுவலர் திரு. வடிவேல் என்பவர் கடந்த 28.08.2004 ஆம் தேதி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட ரம்பங்கள் இரண்டு, கோடாரி இரண்டு, அறுவாள் ஒன்று ஆகியவற்றிற்கு படிவம் 95 தயார் செய்துள்ளார். அந்த 95 படிவம் **(அ.சா.ஆ.28/PW.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் சொத்துக்களான இரண்டு ரம்பங்களில்

பெரிய ரம்பம் **(அ.சா.பொ.1/PW.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்றும் சிறிய ரம்பம் **(அ.சா.பொ.1/PW.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் சொத்தான இரண்டு கோடாரிகளில் பெரிய கோடாரி **(அ.சா.பொ.3/PW.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிறிய கோடாரி **(அ.சா.பொ.4/PW.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சொத்தான அறுவாள் **(அ.சா.பொ.5/PW.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களுக்கு இந்த வழக்கு சம்மந்தமாக யார், எத்தனை மணிக்கு தகவல் தெரிவித்தார்கள் என்றால் பிரிவு வனவர் மகேந்திரன் அவர்கள் மதியம் 12.30 மணியைபோல என்னிடம் தகவல் சொன்னார்கள். தகவல் சொன்னபோது நீங்கள் எங்கு இருந்தீர்கள் என்றால் சாலைப்புதூரில் இருந்தேன். நீங்கள் தகவல் கிடைத்தவுடன் எங்கு சென்றீர்கள் என்றால் நான் நேரடியாக வனச்சரக அலுவலகத்திற்கு சென்றேன். நீங்கள் செல்வதற்கு முன்பாக புகார் கொடுத்த விபரங்கள் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், சென்றபின்பு தான் தெரியும். நீங்கள் வனச்சரக அலுவலகத்திற்கு சென்றபோது யார், யார் இருந்தார்கள் என்றால் திரு. பிச்சை வனவர், கன்னிவாடி பிரிவு, திரு. மகேந்திரன், செம்பட்டி பிரிவு வனவர், திரு. சேர்வராயன் கன்னிவாடி பீட் வனக்காப்பாளர், திரு. சாமிக்கண்ணு வனக்காவலர், திரு. முருகையா வனக்காப்பாளர் மற்றும் வனச்சரகர் ஆகியோர் இருந்தார்கள். வேறு யாரும் இல்லை. எத்தனை மணிக்கு வனச்சரக அலுவலகத்திற்கு சென்றீர்கள் என்றால் 02.30 மணியைபோல சென்றேன். நீங்கள் வனச்சரக அலுவலகத்திற்கு எதில் சென்றீர்கள் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றேன்.

உங்களுக்கு தகவல் கிடைத்தவுடன் வனச்சரக அலுவலகத்திற்கு சென்றுவிட்டீர்கள் என்றால் சரிதான். சாலைப்புதூரில் இருந்து கன்னிவாடி வனச்சரக அலுவலகம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 15 km க்குள் இருக்கும். 15km தூரத்தை இருசக்கர வாகனத்தில் சென்றால் எவ்வளவு நேரத்தில் செல்லலாம் என்றால் 30 நிமிடத்திற்குள் சென்றுவிடலாம். உங்களுக்கு தகவல் கிடைத்து இரண்டு மணி நேரம் காலதாமதமாக தான் சென்றீர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன 5 நபர்களும் உங்களுக்கு முன்பாகவே வனச்சரக அலுவலகத்தில்

இருந்தார்கள் என்றால் சரிதான். உங்களுக்கு தகவல் எவ்வாறு கிடைத்தது என்றால் வனக்காவலர் திரு. மகேந்திரன் என்பவர் நேரடியாக வந்து காலை 11.00 மணிக்கு எனக்கு தகவல் சொன்னார். மேற்சொன்ன விபரங்கள் உங்கள் மேல் அதிகாரிகளுக்கு தெரியுமா என்றால் தெரியும்.

கன்னிவாடியில் இருந்து சம்பவ இடத்திற்கு யார், யார் எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால் சம்பவம் நடந்த இடமான தோணிமலைக்கு இருசக்கர வாகனங்களில் சென்றோம். மேற்சொன்ன 5 நபர்களுடன் நானும் மாலை 05.00 மணிக்கு சென்றோம். உங்கள் வாகனத்தில் யார் உங்களுடன் வந்தது என்றால் நான் மட்டும் தான் சென்றேன். மற்ற வாகனத்தில் யார் வந்தது என்று நினைவில்லை. மொத்தம் எத்தனை இருசக்கர வாகனத்தில் சென்றீர்கள் என்றால் மொத்தம் 4 இருசக்கர வாகனங்களில் சென்றோம். 5 வது நபர் எந்த வாகனத்தில் வந்தார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். மாலை 5 மணிக்கு மேல் தான் அந்த 5வது நபர் வந்தார். நீங்கள் 5 பேரும் சென்ற பிறகு பின்னால் வந்த நபர்கள் எவ்வளவு நேரம் கழித்து வந்தார்கள் என்றால் அரை மணி நேரம் கழித்து 407 வாகனத்தை பிடிபொருட்கள் எடுப்பதற்காக எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

சம்பவம் நடந்த இடம் வாகனங்கள் செல்ல முடியாத இடம் என்றால் சரிதான். 407 வாகனத்தை நிறுத்தியிருந்த இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 500 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்த ராஜாராம் என்பவரின் காடு எவ்வளவு சுற்றளவு என்றால் தெரியாது. சம்பவத்தின் போது சம்பவ நடந்த இடத்தின் நான்கு மால்கள் குறிப்பிடப்படவேண்டியது அவசியம் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான்கு மால்கள் குறிக்கப்பட்ட விசயம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட மரங்கள் முதல் நாள் வெட்டினார்களா அல்லது சம்பவத்தன்று வெட்டினார்களா என்று உங்களுக்கு தெரியாது என்றால் மொத்தம் 7 மரங்கள், முதல் நாளும் சம்பவத்தன்றும் வெட்டினார்கள். முதல் நாள் யார் வெட்டினார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தின் உரிமையாளர் மரங்கள் அனைத்தையும் அனுமதி பெறாமல் வெட்டிவிட்டு, அந்த மரங்களை வெட்டியது குற்றம் என்று பின்னிட்டு தெரிந்துகொண்ட

பிறகு, பொய்யான புகாரை உற்பத்தி செய்து இந்த எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

கைப்பற்றப்பட்ட பிடிபொருட்களின் நீளம், அகலம் தெரியுமா என்றால் தெரியாது. கைப்பற்றப்பட்ட ரம்பத்தின் கைப்பிடி நிறம், அறுவாளின் கைப்பிடி நிறம் தெரியுமா என்றால் தெரியாது. 2 ரம்பம், ஒரு கோடாரி, ஒரு அறுவாள் இதை தவிர வேறு பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். ரம்பம், அறுவாள், கோடாரி ஆகியவற்றை பயன்படுத்திய நபர்கள் யார் என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நீங்கள் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் மாலை 06.30 மணி வரை இருந்தேன். சம்பவ இடம் வெளிச்சம் இல்லாத பகுதி என்றால் சரிதான். நாங்கள் சென்ற நாளில் நிலவொளி இருந்தது.

அனைவரும் சம்பவ இடத்தில் இருந்து வந்துவிட்டீர்களா என்றால் இரண்டு நபர்களை பிடிபொருட்களை ஏற்றுவதற்கு விட்டு விட்டு வந்தோம். பிடிபொருட்களை எப்போது ஏற்றி வந்தார்கள் என்றால் அன்று இரவு ஏற்றி வந்தார்கள். எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. உங்களிடம் கொண்டு வந்த கட்டைகளின் நீளம், அகலம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த கட்டைகளை இரண்டு பேர் தூக்கிவிடலாம் என்றால் சரியல்ல. சீருடை அணிந்தவர்கள் இரண்டு பேர் இருந்தார்கள். கூலிக்கு மற்ற நபர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர், விபரம் தெரியாது. வனச்சரக அலுவலகத்தில் நீங்கள் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் அன்றையதினம் முழுவதும் நான் இருந்தேன். வனச்சரக அலுவலகத்தில் வைத்து தான் எதரிகளிடம் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். அதன்பிறகு எதிரிகளையும், கட்டைகளையும் எடுத்துக்கொண்டு நீதிமன்றத்திற்கு தான் சென்றார்கள் என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் அனைத்தும் உங்கள் அதிகாரிக்கு தெரியும் என்றால் சரிதான். 5 எதிரிகளை தவிர மற்ற எதிரிகள் யார், யார் என்றும் எந்த தினத்தில் பிடித்தார்கள் என்றும் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அன்றையதினத்தில் 5 எதிரிகளை தவிர வேறு யாரையும் கைது செய்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ஸ்தல மகசரில் கையொப்பம் எங்கு வைத்து செய்தீர்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து செய்தேன். ஸ்தல மகசரை யார் எழுதினார்கள்

என்றால் பிச்சை வனவர் எழுதினார். நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வனச்சரக அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. கட்டைகளுக்கு யார் நம்பர் போட்டார்கள் என்றால் சேர்வராயன் வனக்காப்பளார் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் வைத்து கட்டைகளுக்கு சிகப்பு கலரில் நம்பர் போட்டார், நான் அப்போது இருந்தேன்.

நீங்கள் தாக்கல் செய்த படிவம் 95 ல் ரம்பத்தின் நீளம், அகலம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பெரிய ரம்பம், சிறிய ரம்பம் என்று குறிப்பிட்டு விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கோடாரிகளின் நீள அகலங்கள், பெரிய கோடாரி சிறிய கோடாரி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அறுவாள் மற்றும் இவ்வழக்கு சொத்தான உபகரங்கள் உங்களுடைய வனச்சரக அலுவலகத்தில் எப்போது இருக்கும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்கள் எங்களுடைய அலுவலத்தினுடையது அல்ல. எதிரிகள் 10 பேர்களில் யார், யார் என்ன ஆயுதங்களை வைத்திருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

இவ்வழக்கு சொத்தான தோதகத்தி மரங்களை நீதிமன்றத்தில் நீங்கள் ஆஜர் படுத்தவில்லை என்றால் நான் அதை ஆஜர் படுத்தவில்லை. நீங்கள் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், வனச்சரக அலுவலகத்தில் இருந்த பொருட்களை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றியிருந்தால் பிடிபொருட்களின் அளவுகளை துல்லியமாக அளவிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பீர்கள் என்றும், அன்றையதினத்தில் பிடிபொருட்கள் எதுவும் கைப்பபற்றாததால் தான் அவ்வாறு அளவீடுகள் குறித்து குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**3, 4, 5, 7, 9, 10, 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1வது எதிரியின் வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை 3, 4, 5, 7, 9, 10, 11 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஏற்றுக்கொள்கிறார். மேலும், கூடுதலாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

புகார்தாரர் ராஜாராமுக்கு தோணிமலை பகுதியில் நிறைய நிலங்கள் உள்ளது என்றால் இருக்கலாம் எனக்கு தெரியவில்லை. உரிமையாளரின் நிலத்தில் எந்த பகுதியில் இந்த மரங்கள் வெட்டப்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நீங்கள் சென்றபோது எதிரிகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல.

**14 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1வது எதிரியின் வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணை மற்றும் 3, 4, 5, 7, 9, 10, 11 எதிரிகள் தரப்பில் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை 14வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஏற்றுக்கொள்கிறார்.

14வது எதிரியிடமிருந்து சதுப்பு கட்டைகளோ, தோதகத்தி மரங்களோ கைப்பற்றப்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது. 14வது எதிரி நீங்கள் சென்றபோது சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான்.

யார், யாரிடமிருந்து எந்த எந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 14வது எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் 14வது எதிரி இல்லை என்றால் சரிதான்.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1, 3, 4, 5, 7, 9, 10, 11, 14 எதிரிகள் தரப்பில் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை 2வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஏற்றுக்கொள்கிறார்.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor